## கொலொன்ன பிரதேச சபை
## இரத்தினபுரி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 அகஸ்ட் 10 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கொலொன்ன பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்ட மருந்துகளின் பெறுமதி ரூபா 287,815 தொகையான போதிலும், தவறாக நாட்குறிப்புப் பதிவின் மூலம் மீள ரூபா 197,743 தொகை செலவினத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) மருந்து அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 273,600 தொகை சம்பள மீளளிப்பு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கு உரித்தான முத்திரைக் கட்டண வருமானத் தொகையான ரூபா 1,959,721 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கு உரித்தாக ரூபா 605,800 தொகையான வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி, ரூபா 505,300 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) வேலைத்திட்டம் இல. 02 இன் கீழான அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத் தொகை ரூபா 328,750 ஆன போதிலும் இது ரூபா 384,250 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பௌதீகத் திட்டமிடல் தெருக்கள், காணிகள் மற்றும் கட்டிடங்களுக்கு உரித்தான மூலதனப் பெறுவனவுகள் ரூபா 23,219,304 தொகையான போதிலும் இது ரூபா 25,504,450 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) பிரதான பேரேட்டின் காசுக் கணக்கின் படி, வங்கி மீதி ரூபா 915,726 தொகையான போதிலும், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி, காசு மீதி ரூபா 727,793 தொகையானமையால் வேறுபாடு ரூபா 187,933 ஆகக் காணப்பட்டது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

10 கணக்கு விடயங்களுக்குரிய 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக் கூற்றின் படியான மீதிகளுக்கும் உபயோகப் பதிவேடுகளின் படியான மீதிகளுக்கும் இடையிலான வேறுபாடு ரூபா 2,370,142 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

இரத்தினபுரி மாவட்டத்தின் மண் சரிவைத் தடுப்பதற்காகவும் குறைப்பதற்கான செயற்பாட்டின் மூலம் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படக் கூடிய இழப்பைக் குறைத்துக்கொள்வதற்காக இடர் முகாமைத்துவ அமைச்சுச் செயலாளரின் 2011 பெப்ரவரி 10 ஆம் திகதிய ஜா.கொ.ப.ச.2011/1 ஆம் இலக்க சுற்றறிக்கைத் திகதியின் பின்னர் மேற்கொள்ளப்படும் எந்த நிர்மாணிப்பும் ஆரம்பிக்கப்பட முன்னரான அங்கீகாரம் வழங்கப்பட முன்னர் குறித்த உள்ளூராட்சி நிறுவகத்தால் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பால் சாத்தியவளச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் இவ் எல்லையில் நிர்மாணிப்புகளுக்கு உரித்தாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை கண்டறியப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்திற்கு மேலான மீண்டுவரும் செலவினம் ரூபா 1,099,507 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,182,843 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாடுகளின் மிகை ரூபா 2,282,350 இனால் குறைந்திருந்ததுடன் அது 192 சதவீத குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கு முக்கியமாக முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டெழும் வருமானங்களின் அதிகரிப்பைப் பார்க்கிலும் அதிகளவு வேகத்தில் மீண்டெழும் செலவினங்களின் அதிகரிப்பே தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு உரித்தாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 1,157 | 1,035 | 308 |
| வாடகை | 4,408 | 2,962 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 758 | 384 | - |
| ஏனைய வருமானம் | 5,883 | 2,296 | 1,067 |

### 2.3.2 வருமானச் சேகரிப்பிலான செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்படட வருமானத்துடன் ஒப்பிடப்படுகையில் வீதவரியும் வரியும், வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்களின் மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 14 சதவீத, 32 சதவீத, 55 சதவீத,71 சதவீத மற்றும் 51 சதவீத குறைவு காணப்பட்டது.

### 2.3.3 வீத வரி

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் சில பிரதேசங்கள் துரித முன்னேற்றத்திற்கு உட்பட்டிருந்த போதிலும், அப் பிரதேசங்கள் முறையாக

இனங்காணப்பட்டு அவை முன்னேறிய கிராமங்களாகப் பெயரிடப்பட்டு அவ் வலயங்களில் வீதவரி அறவிடப்படுவதற்கான முறையான நடைமுறை ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4. நில வரி

சூரிய கந்த கடைகளுக்கு உரித்தான 11 வரி செலுத்துனர்களிடமிருந்து ரூபா 15,408 தொகையான நிலுவை நிலவரி 2015 யூலை மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய வியாபாரங்களை இனங்கண்டுகொள்வதற்காக வருடாந்தம் ஓர் மெய்மையாய்வு கணக்காய்வுத் தினமாகிய 2015 யூலை 17 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் அவ் வரிகளுக்கு உரித்தான வருமானப் பதிவேட்டைப் பேணுதல் சபைக்குச் சேகரிக்கப்படும் வருமானத்தைச் சார்ந்து மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.3.6 ஏனைய வருமானம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையால் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டதை அடுத்து ஆரம்பிக்கப்பட்ட உள்ளிதுவாவ வாராந்த சந்தை இதுவரையில் இயங்காமையால் இதன் மூலம் சபைக்கு எவ்வித வருமானமும் கிடைக்கப்பெறாமை கண்டறியப்பட்டது.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கரவண்டி தரிப்பிடத்தை ஒழுங்குபடுத்தும் பெயர்ப்பலகை தயாரிக்கப்படுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 14,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், பிரதேசத்தில் உள்ள முறையற்ற முச்சக்கரவண்டி தரிப்பிடத் தேவைப்பாட்டு வசதிகளை வழங்கியதை அடுத்து துணைச்சட்டத்தை விதித்து வருடாந்தம் அல்லது மாதாந்தம் வருமானத்தைப் பெறும் செயற்பாடொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

எம்பிலிபிட்டிய காணிப் பதிவாளர் அலுவலத்தால் 2014 ஆகஸ்ட் மாதத்தின் பின்னரான கால எல்லைக்கு உரித்தாக இரத்தினபுரி காணிப் பதிவாளர் அலுவலகத்தால் 2014 ஆகஸ்ட் மாதத்தின் பின்னைய காலப்பகுதிக்கு உரித்தாகவும், இரத்தினபுரி காணிப் பதிவாளர் அலுவலத்தால் 2014 பெப்ரவரி மாத்தின் பின்னரான கால எல்லைக்கு உரித்தாகவும் முத்திரைக் கட்டணங்கள் சபைக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீண்ட காலமாக சபையால் வழங்கப்பட்டிருந்த ரூபா 925,155 கூட்டுத்தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் சேவையில் ஈடுபட்ட எனினும் தற்போது சேவையில் அல்லாத 04 ஊழியர்களின் ரூபா 30,831 கூட்டுத்தொகையான ஊழியர் பிணை கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 யூலை மாதம் வரையிலும் சபையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான ஓர் வாகனத்திற்காக தரிப்பிட வசதிகள் போதாதிருந்தமையால் சபை வளாகத்தில் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் அவற்றின் நிலைப்பாடு குறித்து சிக்கல் ஏற்படுவதற்கான அபாயம் காணப்பட்டது.

## 3.2 விளைவற்றதும்/ குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

தற்போது பயன்படுத்தப்படாது அலுவலகத்தின் பின்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள உழவு இயந்திரமும் டிரெலரும் உக்கலடையும் அபாயத்திற்கு உட்பட்டிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்